**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**Calendar Case No.156 of 2020**

**Prosecution Witness**:PW6

| | | | |
|---|---|---|---|
| Name | அன்பரசன் (PW6) | Caste | |
| Father Name | ரங்கசாமி | Calling | உதவி ஆய்வாளர் |
| Village | பல்லடம் காவல் நிலையம் | Religion | |
| Taluk | பல்லடம் | Age | 37 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of **June 2026** by Thiru. Kulandaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present),*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது பல்லடம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.01.2020 ஆம் தேதி சேயூர் காவல் நிலையத்தில் நான் உதவி ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்தபோது ராமசந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.3/2020 சட்டப்பிரிவுகள் 279, 337, 304(A) of IPC ன்-கீழ் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**

பின் இவ்வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் விஜயகுமார், ஜெகநாதன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்தேன். அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே 13.30 - 15.30 மணிவரை** வழக்கில் இறந்துபோன கிஷோர் என்பவரின் பிரேதத்தின் மீது அவிநாசி அரசு மருத்துவமனை சவக்கிடங்கின் முன் வைத்து பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த **பிரேத விசாரணை அறிக்கை (அ.சா.ஆ.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சடலத்தை உடல் கூராய்விற்கு அனுப்பி வைத்தேன். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9

வரையிலானவர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். நான் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 16.05.2020ம் தேதி நிலையம் ஆஜரான எதிரியை கைது செய்து, தக்க பிணையில் விடுவித்தேன். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை மோட்டார் வாகனத்தை ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கினை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் திரு.இளங்கோவன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு)**

புகார் கொடுக்கும்போது ராமச்சந்திரன் சம்பவ இடம் சென்று பார்த்துவிட்டு புகார் கொடுப்பதாக சொல்லி இருக்கிறார் என்றால் சரிதான். புகார் காலை 11 மணி அளவில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராமச்சந்திரனின் விலாசம் 15 வேலாம்பாளையம் திருப்பூர் என்றால் சரிதான். சம்பவம் நடந்து எவ்வளவு மணி நேரம் கழித்து சதீஷ் ராமச்சந்திரனுக்கு தகவல் சொன்னார் என்றால் மணி எதுவும் குறிப்பிடப்படவில்லை. சதீஷ் ராமச்சந்திரனுக்கு 10.15 மணிக்கு மேல்தான் சம்பவத்தை பற்றி ராமச்சந்திரனுக்கு சொல்லி உள்ளார் என்றால் சொல்லவில்லை. 15 வேலம்பாளையத்திலிருந்து லூர்துபுறமான சம்பவ இடத்திற்குஇருசக்கர வாகனத்தில் செல்ல வேண்டுமென்றால் 30 நிமிடத்தில் இருந்து 45 நிமிடங்கள் எடுக்கும் என்றால் சரிதான், ஆனால் புகார் வீட்டில் இருந்து தான் வந்தார் என்று எங்கேயும் சொல்லவில்லை. சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையம் வர வேண்டும் என்றால் 30 நிமிடங்கள் எடுக்கும் என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன நபருக்கு நஷ்ட ஈடு பெற வேண்டும் என்பதற்காக தவறான புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த சாலை தாழ்வாகவும் வளைவாகவும் இருக்கும் என்றால் சரிதான். நான் சம்பவ இடம் சென்ற போது கிஷோரின் பிரேதம் அங்கு இல்லை என்றால் சரிதான். எப்போது பிரேதத்தை எடுத்துச் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சதீஷ்குமார் என்ற சாட்சி சதீஷின் தோட்டத்திற்கு செல்லும் போது இந்த விபத்து நடந்திருந்தது என்ற விபரத்தை என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய பார்வை மகஜரில் ரோட்டில் படிந்திருந்த ரத்த கரை பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வாகனத்தின் உதிரி பாகங்கள் சேதம் அடைந்திருந்ததை பற்றி நான் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை. சாட்சிகளை நான் சொன்ன நேரத்தில் சொன்ன முறையில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை.

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |